# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்



வெளியிடுவோர்

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## இதழின் உள்ளே


1. கொர்நேலியுவின் மனமாற்றம் 1
2. நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா? 9
3. பெற்றோராயிருப்பதின் பொறுப்புகள் 12
4. மரணத்திற்கு அஞ்சாதீர் 15
5. யார் இந்த இயேசு? 16
6. சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவது என்றால் என்ன? 19
7. என்னுடைய பகைவனை நான் நேசிக்க முடியுமா? 21
8. கோதுமை விதைத்தால் திராட்சை வருமா? 26

THIRUMARAI AASAAN

Editor :
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 7 SEPTEMBER 1994 Issue - 9

## ஆசிரியவுரை

# கொர்நேலியு மனமாற்றம்

அப்போஸ்தலருடைய நடபடிகள் . 10-ம் அதிகாரத்தில் "கொர்நெலியு மனமாற்றம்" அடைந்த சம்பவம் விவரிக்கப்பட்டுள்ளது. புறவினத்தாரிலிருந்து, முதன் முதலாக இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட, இந்த கொர்நேலியுவை, வேதாகமம், மிக நேர்த்தியாக அறிமுகம் செய்கிறது. ". . . . அவன் தேவ பக்தியுள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்கு பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான். (அப். 10 : 1-2)

கொர்நேலியு ஒரு நூற்றுக்கதிபதி. அதன் பொருள் 'நூறு பேருக்கு அதிபதி, ஆனால் நடைமுறையில், ஒரு நூற்றுக்கதிபதியின் கீழ் ஆயிரம் பேர் வரை இருப்பர். அந்நாட்களில் ரோமப் பட்டாளத்தில், சாமானியர்கள் இப்பதவிக்கு வரமுடியாது. திறமையும், செல்வாக்கும் ஒன்றுசேர இருக்க வேண்டும். ரோமச் சக்கரவர்த்திக்கு நெருக்கமானவர் களோ அல்லது அரசியல் ரீதியாக செல்வாக்குள்ளவர்களோ தான் பொதுவாக இப்பதவிக்கு நியமிக்கப்படுவர்.

இப்படிப்பட்ட நூற்றுக்கதிபதிகளில் சிலர், தாங்கள் பணிபுரியும் இடங்களில், தங்களுடைய பொதுநலத் தொண்டின் மூலம், சமுதாயத்தின் நன்மதிப்பைப் பெற்றவராக இருப்பர். கப்பர் நகூமிலே யூதர்களுக்கு ஒரு "ஜெப ஆலயத்தை" ஒரு நூற்றுக்கதிபதி கட்டிக் கொடுத்தான் என்பதை நாம் அறிவோம். (லூக். 7:5). அவன் யூதமார்க்கத்தைச் சேர்ந்தவனோ அல்லது அம்மார்க்கத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டவனோ அல்ல. இருப்பினும், சமுதாய

நல்லிணக்கத்தில் தனக்குள்ள பிடிப்பை எடுத்துக் காட்டவே அப்படிச் செய்துள்ளான். நமதாண்டவர் கூட, அந்த ஜெப ஆலயத்தில் பிரசங்கித்துள்ளார். (யோவா. 6:59) இப்பேர்ப்பட்ட நல்லெண்ணமும், தொண்டார்வமும், கொண்ட நூற்றுக்கதிபதிகளில் ஒருவர்தான் கொர்நேலியு. இவரது இறைபக்தி, இவர் பெயருக்கு மேலும் சிறப்பைச் சேர்க்கிறது.

கொர்நேலியு, இப்பதவியில் இருந்த ஊர், செசரியா. இது, மத்தியதரைக் கடல் பகுதியில் உள்ள ஓர் அழகுமிகு பட்டணம். அப்பிராந்தியத்தின் ஆளுநரோ அல்லது தேசாதிபதியோ இப்பட்டணத்தில் தான் குடியிருப்பர். தீர்க்கதரிசனம் சொல்லும் நான்கு குமாரத்திகளைப் பெற்றிருந்த, நற்செய்தியாளனாகிய பிலிப்பு இப்பட்டணத்தைச் சேர்ந்தவரே. இந்த பிலிப்புக்கு செசரியாவில், ஒரு பெரிய வீடு இருந்திருக்க வேண்டும். ஏனெனில் ஊழியத்தினிமித்தம், இப்பட்டணம் வந்த பவுல் அப்போஸ்தலன், தன்னுடன் வந்தவர்களோடு, இவனுடைய வீட்டில் தங்கியுள்ளான். (அப். 21:8,9)

கொர்நேலியு, கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கு முன் நல்லவனாக, ஒழுக்க சீலனாக இருந்தான். ஆனால், நற்செய்திக்கு சற்றும் சம்பந்தம் இல்லாதவனாகவே வாழ்ந்துள்ளான். இயேசுக் கிறிஸ்துவைப் பற்றியும் சரியாக அறிந்திருக்க நியாயமில்லை. இருப்பினும், தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதையும், அவருக்கு உண்மையாக இருப்பது அவசியம் என்பதையும் எப்படியோ உணர்ந்திருந்தான். ஒருவேளை முற்பிதாக்களின் மார்க்கத்தில் நம்பிக்கை கொண்டவனாக இருந்திருக்கலாமோ?

இவனைப் பற்றி நல்ல பல காரியங்கள் சொல்லப்பட்டிருந்தாலும், அவன் ஒரு கிறிஸ்தவனாக இல்லை. ஆத்துமா விஷயத்தில் இழந்து போனவனாகவே இருந்தான். இவனுக்கு, யாரும் நற்செய்தி அறிவித்தாகவும் நமக்குத் தெரியவில்லை. பெந்தெகொஸ்தே நாளில் சபையானது ஆரம்பிக்கப்பட்டு, சுமார் பத்து ஆண்டுகள் வரைக்கும், அப்போஸ்தலர்கள், யூதருக்கு மாத்திரமே நற்செய்தியை அறிவித்து வந்தனர். கொர்நேலியு போன்ற, அனைத்து புறவினத்தார்களும், சுவிசேஷ விஷயத்தில் அநாதைகளாக, கவனிப் பாரற்றுக் கிடந்தனர். ஆனால் இந்நிலை தொடர தேவன் விரும்பவில்லை. சுவிசேஷத்தைப் பங்கிட்டுக் கொள்வதில் யூதனுக்கு என்ன உரிமை இருந்ததோ, அதே உரிமை புறஜாதிக்கும் இருக்கிறது என்பதை சந்தேகத்திற்கிடமின்றி வெளிப்படுத்த தேவன் விரும்பினார்.

இந்நிலையில் தான் புற ஜாதியானான கொர்நேலியுவின் ஜெபத்தைக் கர்த்தர் கேட்டார். (அப் 10:1-5) தன்னுடைய தூதன் மூலம், தனது அங்கீகாரத்தை வெளிப்படுத்துகிறார். அதுமாத்திரமல்ல, "நீயும், உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளை, பேதுரு உனக்குச் சொல்வான்" என்றும், (அப். 11:14) இன்னும் அந்தத்

தூதன், பேதுருவை எங்கே சந்திக்கலாம் என்ற விவரத்தையும் கொடுக்கிறார். ''அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்தில் தங்கியிருக்கிறான். அவனுடைய வீடு, யோப்பா பட்டணத்தில், கடலோரத்தில் இருக்கிறது.'' (அப். 10:5,6). சரி, அந்தத் தூதனுடைய வேலைக்கு அத்தோடு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது.

நண்பரே! இங்கே, ஒன்றைக் கவனியுங்கள். கொர்நேலியு இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென்பதை, தேவன் தன்னுடைய தூதன் மூலம் வெளிப்படுத்தவில்லை. இன்றைக்கு, அநேகர் தங்களுடைய இரட்சிப்பின் அனுபவத்தைக் கூறும் பொழுது, வித விதமாகச் சொல்கின்றனர். கர்த்தர் தன்னை கனவில் சந்தித்ததின் மூலம் இரட்சிக்கப்பட்டேன் என்னும், தரிசனத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டேன் என்றும்,'ஒளியின்' மூலம் இரட்சிக்கப்பட்டேன் என்றும் ஒரு சத்தத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டேன் என்றும் சொல்கின்றனர். அவர்கள் சொல்கிறவைகள் உண்மையானால், மிக நல்லவனாக வாழ்ந்த கொர்நேலியுவை, ஏன் தேவன் தன்னுடைய தூதன் மூலம் இரட்சிக்கவில்லை? ஏன்?

ஒருவன், எப்படி இரட்சிக்கப்பட வேண்டுமென்று சொல்லும் வேலையை சுவிசேஷ ஊழியரிடம் தான் ஒப்படைத்துள்ளார். தேவனோ, அவருடைய தூதனோ, அந்த வேலையைச் செய்யவில்லை. இரட்சிப்பைப் பற்றிச் சொல்லும் ஊழியனாகிய பேதுருவை, எங்கு, எப்படி சந்திக்கலாம் என்பது மட்டுமே தேவனால் அனுப்பப்பட்ட தூதன் மூலம் வெளியான செய்தி.

சரி, தேவதூதன் போனபின்பு, தன்னுடைய வீட்டு மனிதரில் இரண்டுபேரையும், தன்னிடத்தில் சேவிக்கிற போர்ச் சேவகரில் தேவபக்தியுள்ள ஒருவனையும் அழைத்து, நடந்த எல்லாவற்றையும் விவரித்துச் சொல்லி, அவர்களை தேவதூதன் வாக்கின்படியே, யோப்பா பட்டணத்துக்கு அனுப்பினான். (சய். 10 : 7,8). யோப்பா பட்டணம், செசரியாவிலிருந்து சுமார் 40 மைல் தொலைவிலிருந்தது.

மிகுந்த எதிர்பார்ப்போடு, அம்மூவரும் யோப்பா பட்டணத்தை அடைந்தாலும், உள்ளூர நம்பிக்கையற்றவர்களாகவே இருந்திருப்பர். புறஜாதியாராகிய, தங்கள் வார்த்தையை ஏற்று, பேதுரு தங்களுடன் வருவானென்று பெரிதாக எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். அவ்வளவு ஏன்? மார்க்க விஷயத்தில், யூதர்களாலே மிகக் கேவலமாக நடத்தப்பட்டபடியால், பேதுரு தங்களுடன் முகங்கொடுத்துப் பேசுவானா என்று கூட எண்ணியிருப்பார்கள். ஆனால் தன்னுடைய திட்டங்களை கனகச்சிதமாக நிறைவேற்றும் நம்முடைய தேவனோ, பேதுருவை, முற்றிலும் ஆயத்தமான நிலையில் வைத்திருந்தார். ஒரு தரிசனத்தின் மூலம் அவனுடைய மன நிலையை திடப்படுத்தினார். (அப். 10: 10-16).

அந்த தரிசனத்தின் பிரதான செய்தி இது தான் : ''தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே"(அப். 10 15) எந்த ஒரு யூதனாலும் எளிதில் ஜீரணிக்க முடியாத தரிசனத்தைக் குறித்து சந்தேகித்து, ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கும்பொழுது, ஆவியானவர் மீண்டும் பேசுகிறார்.''மூன்று மனிதர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து இறங்கி, ஒன்றுக்கும் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போ, நானே அவர்களை அனுப்பினேன்" என்றார். (அப். 10 : 17 -20)

ஒருவாறாக, தன்னை சுதாரித்துக்கொண்டு, மேல்வீட்டிலிருந்து இறங்கி, ''நீங்கள் தேடுகிற மனிதன் நான் தான், நீங்கள் வந்திருக்கிற காரியம் என்ன என்றான்? அவர்கள் வாய்மொழியைக் கேட்டபின், அவர்களோடு போகத் தீர்மானிக்கிறான். அந்த புறஜாதியாரோடு போவது, பேதுருவைப் பொறுத்தமட்டில் ஒரு ''கசப்பான மாத்திரையை" விழுங்குவது போலத்தான். ஆனாலும், அவன் தேவனுடைய வார்த்தைக்கு தன்னை அர்ப்பணித்தான். ''தடுமாற்றம்" என்பது, பேதுருவின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்ட ஒன்று தான். ஆனால், விழுந்தாலும் உடனடியாக எழுந்து நிற்கக் கூடிய பண்பும்,அவனுக்குச்சொந்தமானதே.

ஆம், அம்மூவரையும் பேதுரு தன்னிடத்தில், ஏற்றுக் கொண்டு, அவர்களோடு உண்டு, உறங்கி மறுநாளிலே, அவர்களோடு புறப்படுகிறார். தரிசனம் கண்டபொழுது அவனுக்கிருந்த மனநிலைக்கும், ஆவியானவர் பேசினபிறகு, மாறின மனநிலைக்கும் வேறுபாடுகள் தான் எத்தனை?

இன்றைக்கு, பரிசுத்த ஆவியானவர் மூலம் கொடுக்கப்பட்டுள்ள வேத வசனங்களைப் படிக்கும் பொழுதும், கேட்டும் பொழுதும் நம்முடைய இருதயங்களில் இப்படிப்பட்ட மாற்றம் ஏற்படுகிறதா? ஏற்படும், மாற்றம் மற்றவர்களுக்கு பளிச்செனத் தெரிகிறதா? பேதுருவிடம் ஏற்பட்ட மனமாற்றம் வெளிப்படையாகத் தெரிந்தது. அநேக சமயங்களில், நாம் மனமாறிவிட்டோம் என்று சொன்னாலும், நம்முடைய வாழ்க்கை அதை பிரதிபலிப்பதில்லை. 'மாற்றம்'- மனந்திருந்தின நிலை, அன்றாட ஜீவியத்தில் வெளிப்படையாகத் தெரியாவிட்டால், மனந்திரும்புதல், அர்த்தமற்றதாகிவிடும். இவ்விஷயத்தில் பேதுரு ஒரு சிறந்த முன்னோடி. பின்பற்றுவோம்!

பேதுரு, யோப்பா பட்டணத்தாராகிய சில சகோதரரை கூட அழைத்துக் கொண்டு, கொர்நேலியு வீட்டிற்கு செல்கிறான். '' பேதுரு உள்ளே பிரவேசிக்கிற போது, கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டு போய், அவன் பாதத்தில் விழுந்து பணிந்து

கொண்டான். பேதுரு அவனைத் தூக்கியெடுத்து : எழுந்திரும். நானும் ஒரு மனிதன்" என்றான். (அப். 10:25-26)

அன்பரே! பேதுரு தான், முதல் "போப்" என்று அநேகர் முழுமனதாக நம்புவதை நாமறிவோம். இன்றைக்கு "போப்" என்பவரை அநேகர் அன்றாடம் விழுந்து வணங்குகிறார்கள். அவரும் அதை சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறார். பத்திரிக்கைகளில் நாம் இதைப்பற்றி வாசிக்கிறோம். இந்நாட்களில், தொலைக்காட்சியின் மூலம், இந்தக் கொடுமையை பார்க்கவும் செய்கிறோம். கேட்டால், பூமியில் அவர் தேவனுடைய பிரதிநிதி என்கிறார்கள். அதற்கு, எங்கே வசனத்தில் ஆதாரம் உள்ளது?

மாறாக, தேவனால் அனுப்பப்பட்ட மனிதனாகிய பேதுரு, கொர்நேலியுவின் வீட்டிற்குச் சென்றபோது, அவன், அவர் பாதத்தில் விழுந்து வணங்கினதை கண்டிக்கிறார். நானும் மனிதன் தான், என்னை வணங்கக்கூடாது என்கிறார். மற்றவர்கள் தன்னை வணங்குவதை புன்முறுவலோடு ஏற்றுக்கொள்ளும் "போப்", மற்றவர்கள் தன்னை வணங்குவதைக் கண்டிக்கும் பேதுருவின் "வாரிசாக" எப்படி இருக்கமுடியும்? இன்னும் எத்தனை காலத்துக்கு ஏமாந்து கொண்டே இருப்பது. ஒரு வேளை, பெரிய மனிதர்கள் வணக்கத்திற்குரியவர்களாக இருக்கலாம். ஆனால், எந்த மனிதனும், வணங்குவதற்கு ஏற்றவனல்ல. தேவனை மாத்திரமே, ஒருவன் தொழுது கொள்ள வேண்டும். (வெளி. 19:10)

பிறகு, கொர்நேலியுவுடன் பேசிக்கொண்டு, வீட்டிற்குள் போகிறார் (வ.27) அங்கே, கொர்நேலியுவுடைய உறவின் முறையாகும், அவனுடைய விசேஷித்த நண்பர்களும் கூடியுள்ளனர். (வ.24). அவர்களைப் பார்த்து ஒரு கேள்வியெழுப்புகிறார்."இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள்."? (வ. 29) அதற்கு கொர்நெலியு, தான் கண்ட தரிசனத்தின், தொடர்ச்சியாக இங்கே கூடியிருப்பதாகவும், அதிலும் விசேஷமாக, தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும், இப்பொழுது இங்கே தேவ சமூகத்தில் கூடியிருக்கிறோம்" என்றான். (வ. 30-33).

இப்பொழுது, வேதாகம சரித்திரத்தில், முக்கியத்துவம் வாய்ந்த காட்சியின் உச்ச கட்டம். பேதுருவால் சொல்லப்படும் காரியத்தைக் கேட்பதற்கு கொர்நேலியுவும், அங்கே கூடியிருந்தவர்களும் தயார். பேதுருவும் பிரசங்கிப்பதற்கு தயார். ஆனால், பேதுருவுடன் வந்த யூதர்கள்? அவர்கள், நிச்சயமாக, பேதுரு புறஜாதிகளுக்குப் பிரசங்கிப்பதை விரும்பியிருக்கமாட்டார்கள். ஆனால், பேதுரு, பிரசங்கிக்கத் தொடங்கி, ". . . . . பேசிக் கொண்டிருக்கையில்,

வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்." (அப். 10 : 44) என்று இங்கே காண்கிறோம்.

ஆனால், 11-ம் அதிகாரத்தில், எருசலேமில் உள்ள விருத்தசேதனமுள்ள யூதர்களுக்கு, இவைகளைப் பற்றிச் சொல்லும்பொழுது, அங்கே, "... பேதுரு, காரியத்தை முதலிலிருந்து வரிசையாய் அவர்களுக்கு, விவரிக்கத் தொடங்கினார்" (11 : 1-4). இங்கே, வரிசையாய் என்பது மிக, மிக முக்கியமான ஒன்று. வரிசையாய் என்றால், நடந்தவற்றை ஒன்றன்பின் ஒன்றாக விவரிப்பது. முன்னால் நடந்ததை பின்னாலும், பின்னால் நடந்ததை முன்னேயும் சொல்வதல்ல. அப்படி வரிசையாய் விவரிக்கும் போது இவ்விதமாகச் சொல்கிறார். **"நான் பேசத் தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர், ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார்" என்றான்** (11 : 15).

வாசகரே, கவனியுங்கள். இன்றைக்கு, 'ஆவியின்' பெயராலே அநேகங் கள்ள உபதேசங்களைப் பரப்பி வரும், நிறைய போதகர்கள் தவறு செய்கின்ற இடம் இது தான். பேதுரு, பிரசங்கித்த பிறகு, பரிசுத்த ஆவியானவர் கூடியிருந்தவர்கள் மீது இறங்கவில்லை. அவன் பேசத்தொடங்கும் முன்பே பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். இந்த ஒரு உண்மையைப் புரிந்து கொண்டால், பல குழப்பங்களைத் தவிர்க்கலாம். பேதுருவுடன் சென்ற விருத்தசேதனமுள்ள யூதர்கள், பேதுரு பிரசங்கிப்பதை தடுத்திருப்பார்கள். ஆகவே, தேவன் பரிசுத்த ஆவியை, பேதுரு பேசுவதற்கு முன்பே ஊற்றினார்.

"பரிசுத்த ஆவி", இறங்கினதை, பேதுரு 11-ம் அதிகாரத்தில், எருசலேமில் இருந்த அப்போஸ்தலருக்கும், சகோதரருக்கும் சொல்லும் பொழுது, "ஆதியிலே" நம்மேல் இறங்கினதைப் போலவே" என்கிறார். (2. 11 : 15). மீண்டும், "..... நமக்குத் தேவன் வரத்தை அநுக்கிரகம் பண்ணினது போல, அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம் பண்ணினார் . . . " என்று கூறுகிறார் (11 : 17). **15-ம் வசனத்தில் "ஆதியிலே" என்பதும், 17-ம் வசனத்தில் "நமக்கு" என்பதும்** முக்கியமான வார்த்தைகள். இந்த இரண்டு வார்த்தைகளும், சபை தோற்றுவிக்கப்பட்ட நாளாகிய பெந்தெகொஸ்தே நாளில் நடந்தவற்றையே சொல்கிறது.

ஏன், இங்கே, சுமார் பத்தாண்டுகளுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தை நினைவுபடுத்தி பேதுரு விளக்கம் கொடுக்க வேண்டும்? ஊழியத்தினிமித்தம் அப்போஸ்தலர்கள் வேறு பல பட்டணங்களுக்கும் சென்றார்கள் தானே. ஏதாவது ஒரு பட்டணத்தின் பெயரைச் சொல்லி, அங்கே நடைபெற்றது போல என்று சொல்லியிருக்கலாமே. ஏன், பத்தாண்டுகளுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தை நினைவூட்டிப் பேச வேண்டும்? நண்பரே, அப்படிப் பேசுவதைத் தவிர பேதுருவுக்கு வேறுவழியில்லை. ஏனெனில், **"பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்" எருசலேம் பட்டணத்தில் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு, கொர்நேலியு, விஷயத்தில் தான் நடந்தேறியது. வேதாகமம், முழுவதும் தேடிப் பாருங்கள், வேறு எங்குமே இல்லை. இல்லவே இல்லை!**

இன்று என்ன நடக்கிறது? ஆவியானவருக்கு காத்திருந்தால், இறங்குகிறார் என்று அநேகப் போதகர்கள் சொல்வதை

பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயம் அட்சரம் பிசகாமல் ஏற்றுக் கொள்கிறது. காத்திருக்கும் பொழுதெல்லாம், கேட்கும் போதெல்லாம் ஆவியானவர் இறங்குவது உண்மையானால், அப்போஸ்தலர் காலத்தில், அவர், ஏன் பத்து ஆண்டுகள் மௌனம் சாதித்தார்? ஒருவேளை, அடிக்கடி இறங்கியிருந்தால், பேதுரு, ஏன், பத்தாண்டுகள் பின்னோக்கிச் செல்ல வேண்டும்? கொர்நேலியுவின் காலத்திற்குப் பிறகு, புதிய ஏற்பாடு நிறைவு பெற பல ஆண்டுகள் ஆயிற்றே, அந்தக் கால கட்டங்களில் ஏன் ஒரு முறை கூட பரிசுத்த ஆவியானவர் இறங்கவில்லை? இறங்கியிருந்தால், பரிசுத்த ஆவியானவர் மூலமாகக் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேத எழுத்துக்களில் அவை ஏன் இடம்பெறவில்லை? அப்போஸ்தலர்கள் மோசடி செய்துவிட்டார்களா? பின்னே, என்னதான் காரணம்? தயவு செய்து சிந்தியுங்கள். ''ஆவி", என்றாலே அநேகர் பயந்து விடுகிறோம்.'நமக்கேன் வம்பு' என்று ஒதுங்கிவிடுகிறோம். நீங்கள் ஒதுங்குவது அநேக தவறான உபதேசங்கள் தலைதூக்க வழிசெய்கிறது, என்பதை ஏன் விளங்கிக்கொள்ள மறுக்கிறீர்கள்?

கொர்நேலியுவுக்கும், அவனோடிருந்தவர்களுக்கும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதில், தேவனுக்கு ஒரு விசேஷித்த நோக்கம் இருந்தது. புறஜாதிகளும் இரட்சிப்பின் செய்தியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதே அந்த நோக்கம். அந்த விசேஷித்த நோக்கத்தை,

1) பேதுரு, தயங்காமல் அங்கீகரித்துக் கொள்கிறார் (10 : 28)

2) பேதுருவோடு, கொர்நெலியு வீட்டிற்கு சென்ற யூத சகோதரர்கள் அங்கீகரித்துக் கொள்கிறார்கள். (அப். 10 : 45 -48)

3) பேதுருவோடு, வாக்குவாதம் செய்த அப்போஸ்தலரும், எருசலேமில் இருந்த விருத்தசேதனமுள்ள சகோதரர்களும் அங்கீகரிக்கிறார்கள்.

அப்படியானால் நாம் மட்டும் ஏன், அந்த விசேஷித்த நோக்கத்தை அறிந்து, அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளக் கூடாது? அந்த விசேஷித்த நோக்கம் நிறைவேறிவிட்டது. இன்றைக்கு, அதைப் போல நிறைவேற வேண்டிய எந்த விசேஷித்த நோக்கமும் இல்லை. ஆகவே, ''பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும்" இன்று அவசியமில்லை.

இங்கே, வேறொன்றைக் கவனிப்பதும் அவசியம். கொர்நேலியுவும், அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற பிறகும் பாவத்திலிருந்து விடுதலை பெறவில்லை. இரட்சிப்பைப் பெறவில்லை. ஏனெனில், அதற்குப் பிறகும், அவர்கள் இரட்சிக்கபட என்ன செய்ய வேண்டுமென, பேதுரு பிரசங்கிக்க வேண்டியிருந்தது. அது மாத்திரமல்ல, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்ட அவர்கள், வேறொரு ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கட்டளை கொடுக்கிறார். (10 : 47 :48). வசனம் 47-ல் ''. .

. எவனாவது தண்ணீரை விலக்கலாமா?" என்று சொல்வதால், அந்த வேறொரு ஞானஸ் நானம், தண்ணீர் ஞானஸ் நானமே. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பாவங்களை நீக்கியிருந்தால், தண்ணீர் ஞானஸ்நானம் எதற்கு? தண்ணீர் ஞானஸ்நானம் தான் பாவங்களை நீக்குகிறதென்று அநேக வசனங்கள் அடித்துச் சொல்கிறது. (அப். 2. 37, 38, அப். 22 : 16).

ஆவியைப் பெற்றுக் கொண்டவர்கள் மாத்திரம் தான் இரட்சிக்கப்பட்டவர்களென்று, இன்று பிரபல பிரசங்கிகள் கூறுகின்றனர். ஆனால், கொர்நேலியுவும், அவனோடிருந்தவர்களும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற பிறகும், பாவமன்னிப்புக் காக ஒரு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டியவர் களாயிருந்தார்கள் என ஆராய்ந்தோம். அப்படியானால், இவர்களின் கூற்றில் சத்தியம் எங்கே உள்ளது?

இப்படியெல்லாம் சொல்வதால், பரிசுத்த ஆவியானவரை நாங்கள் அவமானப்படுத்துகிறோம் என்று சிலர் சொல்லக் கூடும். அதில், கிஞ்சித்தும் உண்மையில்லை. பரிசுத்த ஆவிக்கும், இன்றைய கிறிஸ்தவனுக்கும் சம்பந்தமே இல்லையென்பதும் எங்கள் நிலை அல்ல. ''ஒருவன் போதித்தால், தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கடவன்" (II பேது. 4 : 11) என்ற பேதுருவின் ஆலோசனையை ஏற்று, சுத்த நல் மனசாட்சியோடு இவைகளை எழுதுகிறோம்.

இன்றும் கூட, ''மனந்திரும்பி, பாவ மன்னிப்புக்கென்று இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்ஸநானம் பெற்றுக்கொள்ளும் போது, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுகிறோம். (அப். 2 : 38). பவுல் அப்போஸ்தலன் எபேசியருக்கு எழுதும் பொழுது, ''வசனத்தைக் கேட்டு விசுவாசிகளாகும் பொழுது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் முத்திரை போடப்படுகிறோம்" என்று எழுதுகிறார் (எபே. 1 : 13). அவரே, தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, ''ஒவ்வொரு உண்மைக் கிறிஸ்தவனுக்குள்ளும், பரிசுத்த ஆவி வாசம் செய்கிறது என்கிறார் (II தீ.மு. 1 : 14).

அருமையான வாசகரே, இன்றைக்கு கிறிஸ்தவத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும், சில தவறான உபதேசங்களைக் குறித்த விளக்கத்தை, கொர்நெலியு மனமாற்றம் அடைந்த சம்பவத்திலிருந்து கற்றுக் கொண்டோம். அன்பரே! ஒரு வேளை நாம் தவறான உபதேசத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்தால், அதிலிருந்து விடுபட்டு ஆரோக்கியமான உபதேசத்தைத் தழுவிக் கொள்வோம். உங்களுடைய முயற்சியை கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

**EZS ராஜநாயகம்.**

## தேவனுக்கு உகந்தவன் யார்

**எந்த ஜனத்திலாயினும் அவருக்கு பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் என்றார். அப். 10:35**

## நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா?

அப்போஸ்தலர் நடபடிகள் 8ம் அதிகாரத்தில் காணப்படும் எத்தியோப்பிய மந்திரியின் மனந்திரும்பும் கதை உங்களுக்கு நினைவிருக்கிறதா? எத்தியோப்பிய ராணி கந்தாகே என்பவளுக்கு மந்திரியும், அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த ஒரு எத்தியோப்பியனை சந்திக்க, எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தர மார்க்கமாகப் போ என கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி கூறினான். யூத சமயத்திற்கு மாறிய, மத வாதியாகிய அந்த எத்தியோப்பியன், தேவனை பணிந்து கொள்ள எருசலேமுக்கு வந்து விட்டு ஊருக்குத் திரும்பிச் செல்லும் போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான் என்றும் கதை தொடர்கிறது. "ஆவியானவர், - நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்து கொள் என்று பிலிப்புடனே சொன்னார். அப்பொழுது பிலிப்புவை ஓடிப்போய்ச் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு, நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அதற்கு அவன் ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி, பிலிப்பு ஏறி தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக்கொண்டான்" (அப். 8:29-31) தொடர்ந்து, பிலிப்பு அதே வேதவாக்கியத்தைக் குறித்து விளக்கம் அளித்து, இயேசுவைப் பற்றி அவனுக்குப் பிரசங்கித்தான். அதன் விளைவாக அவர்கள் இரதத்திலே தொடர்ந்து பிரயாணம் செய்யும் போது தண்ணீருள்ள ஒரு இடத்திற்கு வர, எத்தியோப்பிய மந்திரி தான் ஞானஸ்நானம் பெறக்கூடுமா என்று கேட்டான். இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் அதற்கு தடையேதுமில்லை என பிலிப்பு விளக்கினான். அப்படி விசுவாசிப்பதாக மந்திரி கூற, இரதத்தை நிறுத்தி, இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான், பின்னர், அவர்கள் இருவரும் தண்ணீரிலிருந்து கரையேறினார்கள். மந்திரி மகிழ்ச்சியுடன் தன் வழியே சென்றான். இவ்வாறு கதை முடிகிறது.

இம்மனிதன் சுவிசேஷத்தை படித்துக் கொண்டிருந்தபோதிலும், அவன் படித்ததைப் புரிந்தானா என பிலிப்பு தெரிந்து கொள்ள விரும்பினான் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். இது நமக்குத் தெரிவிப்பது என்ன? ஒருவன் சுவிசேஷத்தை படிக்கிறதால் மட்டும், அதனுடைய அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுகிறான் என்பது அல்ல. ஒருவன் புரிந்து கொள்ள முடியாது என்றும் அதற்கும் அர்த்தம் இல்லை. ஆனால் அதை புரிந்து கொள்ளாமல் இருக்கக் கூடும்; ஏனென்றால்

அவனுக்குத் தவறாக போதிக்கப்பட்டிருக்கலாம். எனவே, சத்தியத்திற்கு விரோதமாக நிறைய தப்பெண்ணங்கள் அவன் மனதை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும், வேறு காரணங்களும் இருக்கக் கூடும், ஆனால் எத்தியோப்பிய மந்திரியின் காரியத்தில், அவன் உதவியை நாடினான், பிலிப்பும் அவனுக்குத் தேவைப்பட்ட உதவியைச் செய்தான்.

உண்மையென்னவென்றால், தேவன் நம்மோடு பேசியிருக்கிறார். (எபி. 1 : 1, 2) அவருடைய கட்டளைகளை அவருடைய வசனத்தின் வழியாக வெளிப்படுத்தியுள்ளார். (யோ 17 : 17, மத். 7 : 21) அவருடைய கட்டளைகளைப் புரிந்து, அவருக்குக் கீழ்ப்படிய வேண்டியதற்காக, அவருடைய வார்த்தையை நாம் படித்து, கற்றுக்கொள்ள வேண்டுமென விரும்புகிறார். (யா 1 : 22, 2 தீமோ 2:15) நாம் அறியாவிட்டால் அல்லது அவருடைய கட்டளைகளை நாம் புரிய இயலாவிட்டால், அவருக்கு நாம் எவ்வாறு கீழ்ப்படிய முடியும்?

நற்செய்தியை உலகம் எத்திசையிலும் எடுத்துச்செல்ல அப்போஸ்தலர்களுக்கு கிறிஸ்து கட்டளையிட்டார். (மாற்கு 16 : 15, 16 மத். 28: 19, 20) ஏன்? அவர்கள் நற்செய்தியை போதிக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு கட்டளையிட்டார். அதாவது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றை அறிவித்து, நற்செய்தியின் கட்டளைகளை வெளிப்படுத்தி, அதன் மூலமாக மனிதன் கர்த்தரை விசுவாசித்து, அவன் இரட்சிப்பு அடைய அவருடைய விருப்பத்திற்குக் கீழ்ப்படியவும் அவர் கட்டளையிட்டார்.

கிறிஸ்துவை யாரென்று அறியாவிட்டால், ஒருவன் எவ்வாறு கிறிஸ்துவை விசுவாசிப்பான்? விசுவாசம் தேவனுடைய வசனத்தைக் கேட்பதாலே (புரிந்து கொள்வதாலே) வரும் என பவுல் கூறுகிறார். (ரோ 10 : 17) மனஸ்தாபப்படுவதின் விளைவுகளைப் பற்றி ஒருவன் புரிந்து கொள்ளாவிடில், எவ்வாறு அவன் மனஸ்தாபப்படக்கூடும்? "திருடுகிறவன் இனித்திருடாமல் குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன்" (எபே 4 : 28) இதே போன்று ஒருவனுடைய எல்லா பாவங்களுக்கும், மாறாக நல்லதைச் செய்ய வேண்டும். கிறிஸ்து யாரென்று அறியாவிட்டாலோ அல்லது அவரை அறிக்கையிட வேண்டுமென்று தெரியாவிட்டாலோ ஒருவன், கிறிஸ்துவை எவ்வாறு அறிக்கையிடக்கூடும்? (ரோ 10 : 10 மத். 10 : 32, 33) ஞானஸ்நானம் என்றால் என்னவென்றோ அல்லது அதன் அவசியம் என்னவென்றோ ஒருவன் அறியவிட்டால், எவ்வாறு அவன் சுவிசேஷத்தின்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளக்கூடும்? (ரோ 6 : 3, 4 அப் 2 : 38) அது மட்டுமல்ல, ஒருவன் கர்த்தருடைய சபையைப் பற்றி எதுவும் தெரியாவிட்டால், அவருடைய சபையில் எவ்வாறு அவன் அங்கம் வகிக்கக்கூடும்? (மத் 16 : 18, எபே 5 : 23, 1கொரி 12 : 13)

ஞானஸ்நானத்தைப் பற்றியோ அல்லது அதன் அவசியத்தைப் பற்றியோ ஒருவன் தெரியாமலிருந்து, பின்னர் சுவிசேஷத்தின் படியாக அவன் ஞானஸ்நானம் பெற்றதாகக் கண்டுபிடிப்பது சாத்தியமா? அப்படியானால், நாம் கைகளை வைக்கக் கூடிய சகல மனிதர்களையும் தண்ணீரில் முழுக்கி எடுக்க வேண்டும். விபச்சாரத்திற்காக அல்லது வேறு பாவத்திற்காக மனஸ்தாபப்பட வேண்டியது அவசியம் ஒருவன் போதிக்கப்பட்டிருக்காவிட்டால், அவன் சுவிசேஷத்தின்படி ஞானஸ்நானம் பெற்றிருக்கக்கூடுமா? அல்லது, இத்தகைய பாவங்களை விட்டுவிட வேண்டுமென அவன் போதிக்கப்பட்டிருந்த போதிலும், அப்பாவங்களை விட்டுவிட அவன் மறுத்தால், அவன் சுவிசேஷத்தின்படி ஞானஸ்நானம் பெற்றிருக்கக் கூடுமா? ஒரு நாமகரண சபையில் அங்கத்தினராகச் சேர்ந்த ஒருவர், பின்னர் உண்மையிலேயே தான் கிறிஸ்துவின் சபையில் தான் அங்கத்தினரானதாக உணருவது சாத்தியமா? ஆராதனை செய்வது பற்றி வேதாகமம் போதிப்பதை அறியாத ஒருவன், தேவன் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆராதனையைச் செய்யக்கூடுமா? மேற்சொன்ன எல்லா காரியங்களையும், இது போன்ற இதர பல காரியங்களையும் பற்றி தேவன் பாராமுகமாக இருப்பாரா? அல்லது மனிதனின் அறியாமையின் விளைவால் செய்யப்படும் காரியங்களை மன்னிப்பாரா? அப்படியானால், அவருடைய கட்டளைகளை அறியவும், புரிந்துகொள்ளவும் வேண்டுமென அவருடைய வார்த்தையை நமக்கு ஏன் தந்துள்ளார்? அப்படி இருப்பின் தேவனுடைய வார்த்தையைப் போதிக்க வேண்டிய 'தொந்தரவே' நமக்குத் தேவையில்லையே?

அப்படி இல்லை, ஒருவன் அறியாமலோ, அல்லது தற்செயலாகவோ நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தருடைய சபையில் அங்கம் பெற இயலாது அல்லது, தன்னுடைய பாவங்கள் எப்படிப்பட்டவைகளாயிருப்பினும், அவைகளுக்காக மனஸ்தாபப்படாமல், ஒருவன் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக்கொள்ளப்பட முடியாது.

நாம் அறியவும், புரியவும், அவைபடி நடக்கவும் கர்த்தர் தனது ஏற்பாட்டை நமக்கு அளித்துள்ளார். வேறு எவ்வாறு அது இருக்க முடியும்?

J.C. சோட்

## பவுலின் ஆசை

நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால், நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன். பிலிப். 3 :12

## பெண்கள் பகுதி

# "பெற்றோராயிருப்பதின் பொறுப்புக்கள்"

ஆதியிலே, தேவன் ஆதாமையும் ஏவாளையும் நோக்கி, "நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் . . . . . . . ." என்று கூறினார் (ஆதியாகமம் 1 : 28).

சங்கீதம் 123 : 3-4 வசனங்களில், "இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" என்று கூறப்படுகிறது.

ஞானி சாலமோன் நீதிமொழிகள் 30 : 15, 16 -ல் 'ஒருபோதும் திருப்தியடையாத" "மூன்றுகளை" குறிப்பிடுகிறார். அவைகளில் ஒன்று மலட்டுக் கர்ப்பம்.

பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள் என்ற தேவை இன்னும் மாறாமலே உள்ளது. பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஏக்கமும் குழந்தையினிமித்தம் பேரானந்தத்தை அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பமும் எல்லா ஆணுக்கும், பெண்ணுக்கும் உண்டு. அந்த ஆவல் தேவனால் கொடுக்கப்பட்ட இயற்கையான ஒன்று. அதேசமயம் தங்களை மகிழ்ச்சியுறச் செய்ய பிள்ளைகள் இல்லையே என ஏங்கும் இளம் தம்பதியரும், வயதான காலத்தில் தங்களைப் பாதுகாக்க பிள்ளைகள் இல்லையே என வருந்தும் பெற்றோரும் உண்டு.

இன்னும் கூறப்போனால் குழந்தையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஏக்கமானது கலாச்சாரத்தின் கட்டாயமாகவும் உள்ளது. உலகின் பல பாகங்களில், பிள்ளைகளைப் பெறாத ஒரு பெண் கலாச்சாரத்தின் அவமானச் சின்னமாக கருதப் படுகிறாள். ஏன், அவள் சமுதாயத்தால் ஒதுக்கியும் கூட வைக்கப் படுகிறாள். சில கலாச்சாரங்களில் அவள் தன் குடும்பத்தாராலே கேவலமாக மதிக்கப்படுவாள். இன்னும் சில நேரங்களில் அவள் தன் கணவனால் கைவிடப்பட்டு விடுவேனோ என்ற அச்சத்தால் நாட்களை கழிக்க வேண்டிய தாயிருக்கும். பிள்ளை பெற்றுக் கொள்ள முடியாததற்கான குறை தன்னிடத்தில் இருந்தாலும், தன் கணவனிடத்தில் இருந்தாலும் ஒட்டு மொத்தப் பழி இவள் தலையின் மேல்தான் விழும்.

இப்பேர்ப்பட்ட தவறான எண்ணங்களின் விளைவு சோகம் நிறைந்ததாகவே இருக்கும். யாராலும் தீர்க்க முடியாத, அளவில் இயற்கையால் கொடுக்கப்பட்ட ஒரு குறைக்காக ஒருவரை தண்டிப்பது, தவறாக நடத்துவது முட்டாள்தனமான, அர்த்தமற்ற ஒன்று. மாறாக, பிள்ளையற்ற அந்த தம்பதியினரைப் பார்த்து ஒரு அனாதையையோ அல்லது கவனிப்பாரற்ற ஒரு குழந்தையையோ எடுத்து வளர்த்தும்படி உற்சாகப் படுத்துவது எவ்வளவு நலமானதாக இருக்கும்.

அதிவேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகையைப் பார்க்கும்போது பிள்ளைகள் இல்லாத குடும்பங்களால் ஏற்படும் பிரச்சனையைக் காட்டிலும், அதிக மான பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளும் குடும்பங்களால் உண்டாகும் பிரச்சனைகள்தான் அதிகமாகக் காணப்படுகிறது. முன்னேறிய காலம் என்று கருதப் படும் இந்நாட்களில் கூட அநேக குடும்பங்களில் 6, 10, 12 என்று பிள்ளைகளைப் பெற்றுக் கொள் கிறார்கள்.

வெறுமனே பிள்ளை களைப் பெற்றுக் கொள்ளும் பெற்றோருக்கும், பெற்றுக் கொண்ட பிள்ளைகளின் தேவை களை சந்தித்து பொறுப்போடு பேணி வளர்க்கும் பெற்றோ ருக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. இன்றைக்கு பெரும்பாலான பெற்றோர்கள் ஆவிக்குரிய சிந்தனை இல்லாமல், எந்தவித திட்டமிடுதலும் இல்லாமல், அவர் களின் தேவைகளை குறை வில்லாமல் சந்திக்க வேண்டும் என்ற பொறுப்பும், அக்கறையும் இல்லாமல், வெறுமனே ஆண், பெண் உறவால் ஆயிரக் கணக்கான குழந்தைகளை பெற்றுக் கொள்வதைப் பார்த் தால் வேதனையாக உள்ளது.

அப்போஸ்தலனாகிய பவுல் மூலமாக தேவன் சொல்லும் ஒரு வசனத்தைக் கவனியுங்கள். ‘‘ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசு வாசியிலும் கெட்டவனுமாயிருப் பான்’ (I தீமோத்தேயு 5 : 8) ஆகவே ஆணும், பெண்ணும் குழந்தைகளைப் பெற்றுக் கொள் ளும்போது அக் குழந்தைகளுக் கான தங்களுடைய பொறுப்பு இன்னதென்று உணர்ந்து பெற்றுக் கொள்ள வேண்டும். தங்களால் முறையாக பராமரிக் கப்பட முடியாத அளவுக்கு பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள கூடாது. இது என்னு டைய ஆலோசனை அல்ல. இது தேவ கட்டளை. தன்னுடைய சொந்த குடும்பத்தின் தேவை களை சந்திக்கமுடியாத ஒரு மனிதன் தேவனுடைய பார்வை யில் தேவனே இல்லையென்று சொல்லுகிறவனைக் காட்டிலும் மோசமானவன்.

ஏனெனில், தேவனை விசு வாசிக்காதவன் தன்னுடைய ஆத்துமாவை மாத்திரமே வீணடிக் கிறான். ஆனால் சரீரப் பிரகாரமான தேவைகளை சந்திக்கக முடியாதென்றும், ஆவிக்குரிய வகையில் ஒழுங்காக பயிற்றுவிக்க முடியாது என்று தெரிந்தும் குழந்தையைப் பெற்றுக் கொள்ளும் ஒரு தகப்பன் அந்த அப்பாவிக் குழந்தைகளை ஆதர வற்றவர்களாகவும், ஆவிக் குரிய மரணத்தை சந்திக்கவும் செய்கிற படியால் அதிக குற்றவாளி யாகிறான்.

அளவான குடும்பத்தை திட்டமிடுதலில் பெண்களுடைய ஆலோசனையையும் பெற்று செயல்படுவது சிறந்தது. நிறைய குழந்தைகளைப் பெற்று அவர் களின் தேவைகளை சந்திக்க முடியாமல் அல்லல் படுவதைக் காட்டிலும் ஒன்று அல்லது இரண்டுடன் நிறுத்திக் கொள்வது நல்லதுதானே!

குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள விரும்பும் தம்பதியரே,

ஆக்கப்பூர்வமான இந்த ஆலோசனைகளையும், வசனப் பூர்வமான தேவனுடைய ஆலோசனைகளையும் ஏற்று செயல்படுங்கள்.

**Betty Choate**

அளவோடு பெற்று வளமோடு மாத்திரமல்ல, ஆசீர்வாதத்தோடும் வாழுங்கள்.

**Rachel Nayagam**

## வாசகர்கள் கவனத்திற்கு

புதிய விலாசத்திற்கு மாறும் பொழுது, உங்கள் வரிசை எண்-ஐயும், பழைய விலாசத்தையும் தவறாமல் தெரியப்படுத்துங்கள். இல்லாவிடில் உங்கள் பெயரை பட்டியலில் இருந்து நீக்க நேரிடும்.

ஆசிரியர்

புதிதாக, "திருமறை ஆசான்" இதழ் பெற விரும்புவோர், தயவு கூர்ந்து தெளிவான முழு முகவரியை எழுதவும். குறிப்பாக, அஞ்சல் குறியீட்டு (Pin code) எண், மற்றும் மாவட்டத்தின் பெயரையும் குறிப்பிடவும்.

# மரணத்திற்கு அஞ்சாதீர்!

மரணம் என்ற எண்ணமே மனிதனுக்கு எப்போதும் பயங்கர நடுக்கத்தைத் தருவதாக இருக்கிறது. நமக்கு மிகவும் பழக்கமான சகலவற்றையும் நிரந்தரமாக விட்டு விட்டு, இவ்வுலகிலிருந்து மரணம் நம்மைப் பிரித்து விடுவதை சிந்தித்துப் பார்க்கிறோம். " என் இருதயம் எனக்குள் வியாகுலப்படுகிறது; மரணத்திகில் என் மேல் விழுந்தது. பயமும் நடுக்கமும் என்னைப் பிடித்தது; அருக்களிப்பு என்னை மூடிற்று" (சங். 55 : 4-5) என்பதாக மரணத்தைப் பற்றி தாவீது எழுதினார். எல்லா காரியங்களிலும் மிகவும் நிச்சயமான மரணத்தை "பயங்கர ராஜா" என யோபுவின் நண்பனாகிய பில்தாத் கூறினான். (யோபு 18 : 14) ஆனால், மரணத்தை ஒரு புது வாழ்வின் தொடக்கம் என்று காணவேண்டுமேயன்றி, சகலமும் முடிந்தது என்ற கண்ணோட்டத்தில் அதைப் பார்க்க வேண்டியதில்லை. கர்ப்பப்பை என்னும் நெருக்கமான சிறைச்சாலையில் முடங்கிப் போய்க்கிடந்த குழந்தை, விடுதலை பெற்று பிரகாசமும் அதிசயமுமான ஒரு பூமியில் வந்து பிறக்கும் வேளையைப் போலவே, மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு குழந்தை பிறக்கும் போது நாம் மகிழ்ச்சி அடைகிறோம், அதே நபர் மரணமடையும் போது நாம் வேதனைப்படுகிறோம். ஆனால், சாலமோன் நமக்குக் கூறுகிறார். "பரிமள தைலத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியும், ஒருவனுடைய ஜநந நாளைப் பார்க்கிலும் மரண நாளும் நல்லது" (பிர7 : 1)

மனிதன் எப்போதுமே மரணம் அற்ற நிரந்தர வாழ்வை விரும்பும் குணமுடையவனாக இருக்கிறான். நித்திய ஜீவனைப் பற்றி உண்மையிலேயே தெரியப்படுத்தும் ஒரே புத்தகம் வேதாகமம் மட்டுமே. மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வைப் பற்றி பல பண்பாடுகளும் நம்பிக்கை கொண்டுள்ள போதிலும், பரிசுத்த வேதாகமம் மட்டுமே அது பற்றிய சரியான படப்பிடிப்பைக் காட்டுவதுடன், அழியா நம்பிக்கையையும் நமக்குத் தருகிறது. மீண்டும் வாழ்வு என்ற இந்த நம்பிக்கையே வாழ்க்கையை விசேடமுள்ளதாக்குகிறது.

சரீரம், ஆத்துமா, ஆவி ஆகியவற்றைக் கொண்ட ஒரு பிறவியே மனிதன் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மரணத்தின்போது, தற்காலிகமான அந்த சரீரம் ஒரு கந்தல் ஆடையைப் போல களைந்து எறியப்பட்டு, உண்மையான மனிதன் நித்தியத்திற்குள் வாழ்கிறான். இலையுதிர் காலத்தின்போது, உலகின் பல பகுதிகளிலும், குளிர் காற்று பூமியைப் பலமாகத் தாக்கி இயற்கையே 'மரணம் அடைந்து விட்ட' தோற்றத்தை உண்டாக்குகிறது. ஆனால், அதைத்

தொடர்ந்து வரும் இளவேனிற் காலத்தில், அழகும் நறுமணமும் பொங்க செடிகொடிகள் "புத்துயிர் பெற்று" புது வாழ்வைத் தொடங்குவதைக் காண முடிகிறது. ஒவ்வொரு இளவேனிற் காலத்திலும், செடிகளுக்கு புத்துயிரும் அழகும் அளிக்கும் வல்லமை தேவனுக்கு உண்டு என்பதை நேரில் காண்கிறோம். அப்படியானால், மனிதனை உயிர்ப்பித்து, அவனுடைய ஆவிக்கு பரலோகத்தில் வாழ்வதற்கு ஏற்ற ஒரு புதிய சரீரத்தை அளிக்கும் அவரது வல்லமையைப் பற்றி ஒருபோதும் நாம் சந்தேகிக்கக் கூடாது. (2 கொரி 5 : 1).

**எஸ்.எஸ். ராஜன்.** **ரோன்னி லோவ்.**

## யார் இந்த இயேசு?

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு எனப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இது முதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்" (ஏசாயா 9 : 6 -7).

இயேசு வருகிறார் என்று பழைய ஏற்பாடு கூறுகிறது. இயேசு வந்திருக்கிறார் என்பதாக நற்செய்திகள் கூறுகின்றன. இயேசு மீண்டும் வருவதாக புதிய ஏற்பாட்டின் பிற பகுதிகள் தெரிவிக்கின்றன. "யார் இந்த இயேசு?" என நாம் நன்கு புரிந்து கொள்ள உதவும் ஒரு பகுதியை மட்டும் இங்கு எடுத்துக்கொள்வோம்.

### அதிசயமான ஆலோசகர்

ஏசாயா 9 : 6 -7 வசனங்களில், இயேசு "அதிசயமான ஆலோசனைக் கர்த்தா" என அழைக்கப்படுகிறார். தென் தேசத்து ராஜ ஸ்திரீயாகிய சேபா நாட்டு அரசி சாலமோனுடைய ஞானத்தைக் கேட்க ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து வந்தாள் என மத்தேயு 12 : 42 ம் வசனம் கூறுகிறது. சாலமோன் 3000 நீதி மொழிகளையும், 1005 சங்கீதங்களையும் உருவாக்கினான். (1 இராஜாக்கள் 4 : 32) என்றாலும் இயேசு சாலமோனைப் பார்க்கிலும் அதிக ஞானமுள்ளவர்.

இயேசுவின் ஆலோசனையை (ஞானத்தை) நீங்கள் அடையத்தக்கதாக அவர் வைத்துள்ளார். ''உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாயக் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக் கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக். 1 : 5) " கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" (மத் 7 : 7 -8) ''தேவனையும் நம்முடைய கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது" (2 பேதுரு 1 : 2, 3). ஜெபத்தின் வழியாகவும், சுவிசேஷத்தைப் படிப்பதின் மூலமாகவும், அதிசயமான ஆலோசகராகிய இயேசு உன்னை வழி நடத்துவார்.

## வல்லமையுள்ள தேவன்

பெத்லகேமில் குழந்தையாகப் பிறந்தது இயேசுவின் தொடக்கம் அல்ல. அதற்கு முன்னரே அவர் இருக்கிறார். ''ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதென்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது . . . அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய். நமக்குள்ளே வாசம் பண்ணினார்". (யோ 1 : 1 -4 : 14) இயேசு தேவனாக இருக்கிறார்; மனிதர்கள் மத்தியில் அவர் வாழ வந்தார். தேவனுடைய ஞானத்தை மட்டுமின்றி அவருடைய வல்லமையையும் தன்னோடு இயேசு கொண்டு வந்தார். இயற்கை இயேசுவுக்கு அடங்கிப்போனது. (யோ 2 : 1 -11 மத். 8 : 23 -27; யோ. 6 : 15 -21) வியாதியை அகற்றும் வல்லமை அவருக்கு இருந்தது. (மத். 9 : 27 -31) லூக்கா 5 : 12 -14; மாற்கு 7: 31-37) அசுத்த ஆவிகளின் மேலும் பிசாசுகள் மேலும் அவருக்கு அதிகாரம் இருந்தது. (மாற்கு 1 : 32, 34; 39 மத். 4: 24) மரித்தோரை உயிருடன் எழுப்பியதன் மூலமாகவும் (லூக்கா 7 : 11 -18 8 : 40-42; 49-56; யோ. 11) அவரே மரணத்திலிருந்து உயிர்தெழுந்ததாலும் (மத். 28, மாற். 16, லூக். 24, யோ.20) மரணத்தின் மேல் தனக்குள்ள அதிகாரத்தை இயேசு காட்டினார். அவர் மீண்டுமாக வரும்போது,

மரணத்திலிருந்து எல்லா மக்களையும் எழுப்புவதாக வாக்குத்தந்துள்ளார். ( 1கொரி 15 : 1. 1 தெச. 4 : 13 -18, யோ. 5: 28-29).

## நித்திய பிதா

ஏசாயா 9ம் அதிகாரத்திலே, இயேசு 'பிதா' என குறிப்பிடப்படுகிறார். வேதாகமத்தின் மற்றப் பகுதிகளிலே அவர் "மேய்ப்பன்" "கதவு" "வழி" என்றும், இன்னும் பல பெயர்களாலும் அழைக்கப்படுகிறார். (யோ 10 : 1 -21, 14 : 1 -6) "பிதா" என்று ஏசாயா 9ம் அதிகாரத்தில் குறிக்கப்பட்டதின் அடிப்படை பொருள்,"தேவைகளைத் தருபவர்", "பாதுகாவலர்" என்பதாகும். ஏழைகளுக்கு உதவ தனது செல்வத்தை யோபு உபயோகித்தான்; எனவே ஏழைகளின் தகப்பன்" என்று அவன் அழைக்கப்பட்டான். (யோபு 29 : 16) "பார்வோனுக்குத் தகப்பன்" என யோசேப்பு அழைக்கப்பட்டான் (ஆதி 45:8) இயேசு நம்மை நேசிக்கிறார், நமது தேவைகளை சந்திக்கிறார், பிள்ளைகளை தகப்பன் பாதுகாப்பது போல, இயேசு நம்மை பாதுகாக்கிறார். "தகப்பன்தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்". (சங். 103 : 13)

## சமாதானத்தின் இளவரசன்

இயேசுவின் பிறப்பை தூதர்கள் அறிவித்தபோது, "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்" (லூக்கா 2 : 14) மனிதர்களிடையே சமாதானத்தையும், தேவனோடு சமாதானத்தையும் இயேசு வழங்குகிறார்."இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், தம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" (ரோமர் 5 : 1) "...... உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்பு கூர்ந்து, உன்னிடத்தில் அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூர்ந்தால் ......" (லூக். 10 : 27) நமக்கு அதிக சமாதானம் கிடைக்கும்.

யார் இந்த இயேசு? தனது ஞானத்தை நமக்கு அளித்திடும் அதிசயமான ஆலோசகர் இயேசு நமது பாவங்களுக்கு மன்னிப்பும், நித்திய ஜீவனும் அளித்திடும் வல்லமையுள்ள தேவன் அவர். இயேசு, நம்மை பாதுகாக்கும், நேசிக்கும், காப்பாற்றும் நமது நித்திய பிதா. மனிதர்களிடையேயும், தேவனோடும் சமாதானத்தின் இளவரசராக இயேசு விளங்குகிறார்.

**மார்க் போர்ட்**

## சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவது என்றால் என்ன?

ஒரு சபையில் சேருவது பற்றி பல மக்கள் பேசிக் கொள்ளுகின்றனர். இது லயன்ஸ் கிளப் அல்லது ரோட்டரி கிளப் போன்ற ஒரு கிளப்பில் ஒருவர் சேருவது போல இருக்கிறது. பொதுவாக, இது போன்ற ஒரு அமைப்பில் ஒருவரை அங்கத்தினராக ஏற்றுக் கொள்ளுவதோ அல்லது மறுப்பதோ அதன் அங்கத்தினர்களின் விருப்பத்தையே பொறுத்தது. கர்த்தரின் சபையைத் தவிர வேறு ஒரு குறிப்பிட்ட சபையில் ஒருவர் அங்கத்தினராக வேண்டுமென்றால், மேலே குறிப்பிட்டதுபோல, அந்த சபை அங்கத்தினர்களுக்கே சகல அதிகாரமும் உள்ளதாக பொருள் கொள்ளலாம். இக்காரியத்தின் மறுபக்கத்தைப் பார்ப்போம். அதாவது கர்த்தருடைய பக்கம், அல்லது சபையில் அங்கத்தினராவது பற்றிய அவரது பாகம். ஒருவன் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவின் சபையில் அங்கம் பெற உண்மையிலேயே விரும்பும்போது, மற்ற எல்லா காரியங்களையும் விட இதுவே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த செயல்.

முதலாவதாக, கர்த்தர் ஒரே சபையைக் கட்டினார். அந்த சபை அவருக்குச் சொந்தமானது (மத். 16 : 18 என வேதாகமம் போதிப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதின் அஸ்திபாரம் அவரே (1 கொரி 3 : 11) அதின் தலைவர் அவரே, (கொலோ 1 : 18) அதின் இரட்சகர் அவரே (எபே 5 : 23) அவருடைய பெயரை அது அணிந்து கொண்டுள்ளது (ரோமர் 16 : 16) சபையானது அவருடைய ஆன்மீக சரீரம், அவருடைய குடும்பம் ( 1 கொரி 12:27, 1 தீமோ 3 : 15) மேலுமாக கிறிஸ்துவே சபையின் இரட்சகராக இருக்கும்போது, சபையில் யாரை அங்கத்தினராகச் சேர்ப்பது அல்லது மறுப்பது என்பதற்கான அதிகாரமும் அவருக்கு உண்டு. நிச்சயமாக, இவ்விதமான முடிவு எடுக்க மனிதனுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. பின்னர் ஒருவர் இரட்சிக்கப்பட, கர்த்தருடைய விருப்பங்களுக்கு ஏற்ப, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் போது, அம்மனிதர் அவருடைய இருதயத்திலிருந்து கீழ்ப்படிந்துள்ளாரா இல்லையா என்பதைப் பகுத்துணரக் கூடியவர் கர்த்தரேயன்றி, மனிதன் அல்ல. இவ்விதமாக அவர் செய்யும் போது கர்த்தர் அவரை இரட்சித்து, தனது சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார். (மாற்கு 16 : 16, அப். 2 : 38, 2 : 47) அவ்வாறு அவர் செய்யத்தவறினால், அவர் எதை உரிமை கொண்டாடினாலும் அல்லது வேறு யாரும் எதைக் கூறினாலும், அவர் இரட்சிக்கப்படவில்லை அல்லது (சபையில்) சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதே உண்மை.

வேறு விதமாகக் கூறினால், தேவனுடைய வசனத்தை ஒருவர் கேட்கும் போது, அது அவர் இருதயத்தில் கருக்கொள்ளுகிறது.

மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட (தண்ணீரில் முழுகி) ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய கட்டளைகளுக்கு அவர் கீழ்ப்படியும் போது, அந்நபர் ஆவியில் மீண்டும் பிறக்கிறார் அல்லது கர்த்தருடைய குடும்பத்தில் அங்கத்தினராகிறார் (யோ. 3 : 3 -5).

சந்தேகமில்லை, மக்களை நாம் சபையின் அங்கத்தினர்களாக (உண்மையிலே அவர்கள் அவ்வாறு இல்லாவிட்டாலும்) ஏற்றுக்கொள்ளுகிறோம். விசுவாச அறிக்கை, மனஸ்தாபப்படுதல், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என வாயினால் அறிக்கை செய்தல், பாவங்கள் மன்னிக்கப்பட தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறுதல் ஆகிய வெளியரங்கமான செயல்களையே நாம் கவனிக்கிறோம். இரட்சிக்கப்பட விரும்புவதாக அவர்கள் கூறும் போதும், இரட்சிப்புக்கு ஏதுவான செயல்களை செய்ய விரும்பும் போதும், அந்த வெளியரங்கமான கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்ப்படியும் போதும், நாம் செய்யக் கூடியதெல்லாம் கர்த்தர் அவர்களை இரட்சித்து, சபையில் சேர்த்துக் கொண்டார் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளுவது தான். ஆனாலும் ஒருவனுடைய இருதயத்தின் உண்மையான சிந்தனைகளை அறிய வல்லவர் கர்த்தர் மட்டுமே. எனவே, கர்த்தர் ஒருவரே ஒருவனை இரட்சிக்கவும் தனது சபையில் அவனைச் சேர்த்துக் கொள்ளவும் முடியும். பவுலடியார் எழுதியது போல,"ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது" (2 தீமோ 2 : 19)

**தமிழில் : எஸ். எஸ். ராஜன்.**

## தேவனுக்கு மகிமை

நாம் வேண்டிக்கொள்கிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும், சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக.

**எபே. 3 : 20, 21.**

## என்னுடைய பகைவனை நான் நேசிக்க முடியுமா?

முதலாவதாக, இந்தக் கேள்வியின் கருத்தை ஜீரணிக்கவே கடினமானதாக இருக்கிறது. இரண்டாவதாக, "முடியும்" என்று சொல்லுவதற்கு நமக்கு கடினமாக இருக்கிறது. மூன்றாவதாக, கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்கின்ற ஒவ்வொருவனுக்கும் இது அவசியமாக இருக்கின்றது. நான்காவதாக, பகைவனிடம் நாம் எப்படி அன்பை வெளிப்படுத்த முடியும்? "என்னுடைய பகைவனை நான் நேசிக்க முடியுமா?" என்கிற கேள்விக்கு தேவனுடைய வார்த்தையிலேயே நாம் பதில் கண்டு பிடிப்போம். எந்த சூழ்நிலையிலும் நாம் நம்முடைய பகைவனை நேசிக்கக் கற்றுக்கொள்ள தேவனுடைய வார்த்தையையே சார்ந்திருப்போம்.

சூரியனுக்குக் கீழே பிறந்திருக்கிற எந்தவொரு மனிதனும் இந்தக் கேள்வியின் கருத்தை ஜீரணிக்க முடியுமா? உண்மையான, நேர்மையான பதிலை எதிர்நோக்கக் கூடியதாகவே இந்தக் கேள்வி அமைந்திருக்கின்றது. இந்தக் கேள்விக்கான பதில் "இல்லை", "முடியாது" என்றுதான் சொல்ல வேண்டும். ஏன்? நன்மை, தீமையை அறியக்கூடிய நிலையை மனிதன் அடைகின்றபோது, அவனுக்குள்ளே தான் என்கிற அகந்தை ஏற்பட்டுவிடுகின்றது. (ஆதி 3 : 7) தேவனுக்குக் கீழ்படியாமல் போன காரணத்தினால், ஆதாமும், ஏவாளும், தாங்கள் நிர்வாணிகளாக இருப்பதைக் கண்டார்கள். தங்களுடைய நிலையை அறிந்து கொண்டார்கள். அதனால், அத்தி இலைகளைக் கொண்டு தங்களை மறைத்துக் கொண்டார்கள். எது அவர்களை அத்தி இலைகளைக் கொண்டு மறைக்கச் செய்தது? மனிதன் பரிசுத்தமாய் இருந்த போது, தன்னைப் பற்றியே அவன் எண்ணிக்கொள்ளவில்லை. மாறாக, தேவனோடு சஞ்சரித்தான். அவருடைய வார்த்தைகளுக்குப் பயந்திருந்தான். ஏனென்றால், தேவன் தாமே அவனுக்கு உற்ற நண்பராக இருந்தார். ஆனால் தேவனுக்கு மனிதன் கீழ்ப்படியாமல் போனபோது, தேவனுடைய பரிசுத்தத்திலிருந்து அவன் மரிக்கப்பட்டான். அவனுடைய பரிசுத்தத்தன்மையானது நிர்வாணமாக மாறியது. இதன் காரணமாக, தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு தான் தப்பித்துக் கொள்ள தனக்குள்ளே ஒரு உணர்வை வளர்த்துக் கொண்டான். மேலும், தன்னை மட்டுமே காத்துக் கொள்ள அவன் அந்த உணர்வை ஆயுதமாக பயன்படுத்தினான். இந்த நிலையில், அவன் தன்னுடைய மனைவியாகிய ஏவாளையே மறந்து போனான். அந்த ஏவாள் அவனுடைய விலா எலும்புகளில் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்டவள் ஆதி (2:21)அவன், தன்னுடைய மனைவியின் நிர்வாணத்தைக் கூட மறைக்க எண்ணம் கொள்ள வில்லை. மாறாக, தன்னைத்தான் மறைத்துக் கொண்டான் (ஆதி 3 :

10) ஏனென்றால், தேவனுடைய நியாத்தீர்ப்பிலிருந்து தான் மட்டுமே தப்பித்துக் கொள்ள வேண்டுமென்கிற சுய உணர்வை அவன் தனக்குள்ளே வளர்த்திருந் தான் ( ஆதி 3 : 12) தான் என்கிற அகந்தையோடு மற்றவர்கள் மேல் பொறாமையுணர்வு ஏற்படு கின்றது. அதன் விளைவாக, பகைமையுணர்வும் உருவா கின்றது (ஆதி 4 : 5) தேவன் காயீனுடைய பலியை அங்கீகரிக் காத காரணத்தினால், காயீன் தன் சகோதரன் ஆபேல் மேல் எரிச்சல் கொண்டு பொறாமை கொண்டான். காயீனும், ஆபேலும் ஆதாம் ஏவாளின் குழந்தைகள். காயீனிடத்தில் தான் என்கிற அகந்தை இருந்த காரணத்தினால், அவனிடத்தில் பொறாமை யுணர்வும், கோபமும் உருவாகின. தன்னுடைய சகோதரனை அவன் ஆட்கொள்ள எண்ணினான். அதன் விளைவாக, தன் சொந்த நலனுக்காக ஒரு பெரிய தவறை செய்யத் துணிந்தான் (ஆதி 4 : 8) மறுபடியுமாக, தான் என்கிற அகந்தை தன் சகோதரனை கொல்லுகின்ற உணர்வை அவனுக்குள்ளே உருவாக்கியது. நாளடைவில், இப்படிப்பட்ட அகந்தை மனிதனுக்குள்ளே உருவாகி, யாரையும் கொலை செய்யக் கூடிய உணர்வை ஏற்படுத்தியது. அதனால், தான் என்கிற அகந்தையான இரத்தத் தினால் மனிதன் கறை பட்டிருக்கின்ற காரணத்தினால், "என்னுடைய பகைவனை நான் நேசிக்க முடியுமா?" என்கிற கேள்வியை அவன் ஜீரணிக்க முடியாதவனாக இருக்கின்றான்.

யாரொருவன் தன் பகைவனை தான் நேசிக்கிறான் என்று உறுதியாக சொல்ல முடியும்? இந்தக் கேள்விக்கு பதில் நேர்மையும் உண்மையும் உள்ளதாக இருக்கவேண்டும். தன்னுடைய பகைவனை ஒருவன் நேசிக்க அவனால் கூடுமா? மனிதன் எப்போது நன்மையைத் தேடவில்லையோ, அப்போது பாவம் அவனிடத்தில் இருந்து, அவனை ஏமாற்றி பாவ வலையில் விழச்செய்து விடும். மனிதன் அந்த வலையில் விழுந்தவுடன், பாவம் அவனை மேற்கொண்டுவிடும் (ஆதி 4 : 7) "அந்தப்படியே, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை, எல்லாரும் வழி தப்பி, ஏகமாய்க் கெட்டுப் போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனா கிலும் இல்லை. சமாதான வழியை அவர்கள் அறியா திருக்கிறார்கள்", என்று ரோமர் 3 : 10, 12, 17 வசனங்களில் வாசிக்கிறோம். காயீன் நன்மை செய்கிறவனாக இருந்து இருந்தால், தன் சகோதரன் ஆபேலை கொன்று போட்டிருக்க மாட்டான். தனக்குள்ளே தான் என்கிற அகந்தை ஏற்பட்டு, அதினாலே கோபமும் பொறா மையும் உருவாகி, நீதிமானற்று, தன்னுடைய சகோதரனைக் கொன்று போட்டு, பகை யுணர்வுக்கு அடிமையானான். (ஆதி 4 : 8) நீதியற்ற காரியங்கள் மனிதனுடைய மனத்தைக் கடினப்படுத்தி, அவன் செய்கின்ற தீமையான காரியங்களுக்கு சாக்குப்போக்குச் சொல்லி, அவனை அந்த குற்றங்களிலிருந்து மறக்கச் செய்து விடுகின்றன. "நான் அறியேன்" என்று அவன் சொல்லக் கூடும் (ஆதி 4:9)

தங்களுடைய மனம் சாபத்தினாலும், வெறுப்பினாலும் கடினப்பட்டுப் போனதினாலே, எந்த சூழ்நிலைகளிலும் "அன்பு" என்கிற வார்த்தையை கூறமாட்டார்கள். மேலும் தங்களுடை பகைவர்களுக்கு அன்பு செய்ய மாட்டார்கள். தங்கள் கண்களைக் குருடாக்கி இருளிலே அவர்கள் உழன்று கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களிடத்தில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் இருக்கின்றன. (1 யோ 2 : 11, 16) மேலும், அவர்கள் பரலோக தேவனையும், அவருடைய அன்பையும் தேடமாட்டார்கள். தங்களுடைய பகைவர்களிடம் அன்பை உலக மனிதர்கள் வெளிப்படுத்தினாலும், அவர்கள் கிறிஸ்துவையும் தேவனையும் மறுதலிக்கின்ற காரணத்தினால், அவர்கள் பொய்யர்கள் தான் (1 யோ 2 : 22) ஏனென்றால், உலக மனிதர்களுடைய அன்பானது இவ்வுலகத்துக்குரியது அவர்கள் உலகத்துக்குரியவைகளைப் பேசுகிறார்கள், உலகமும் அவர்களுக்குச் செவி கொடுக்கும் (1 யோ. 4 : 5) ஆகவே, பகைவரை நேசிக்க முடியும் என்று சொல்லுவது கடினமான காரியமாகும்.

கிறிஸ்தவ வாழ்க்கை நடப்பிக்கின்ற ஒருவனுக்கு, பகைவரை நேசிப்பது ஒரு விசித்திரமான காரியமாகும். ஏனென்றால், கிறிஸ்தவம் அன்பையே மையமாகக் கொண்டிருக்கிறது. அன்பில்லாதவன் எவனும் ஒரு கிறிஸ்தவன் அல்ல. ஏனென்றால், கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவன். கிறிஸ்து வானவர் மனுக்குலத் திற்காக தம்மையே பலியாகத் தந்த தேவனுடைய குமாரனாவார். கிறிஸ்துவின் அன்பு சுயநலமற்றது. அதனால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் அயலானை நேசிக்க வேண்டும். மேலும் அவனுக்கு பகைவர்கள் கிடையாது. ஏனென்றால், "தன் சகோதரனிடத்தில் அன்பு கூறுகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்". (1 யோ 2 : 10) மேலும் "அவருக்குள்ளே (கிறிஸ்துவுக்குள்ளே) நிலைத்திருக்கிறெனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்" (1 யோ 2 :6) கிறிஸ்து எல்லாரையும் நேசித்தார் (1 யோ 4 : 9) தாங்கள் போகுமிடமெல்லாம் அன்பை விதைத்து, சமாதான மக்களாக கிறிஸ்தவர்கள் திகழ்கிறார்கள்.

அன்பை செயலிலே வெளிப்படுத்தவேண்டும் (1 யோ 3 : 18) "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் . . . . . ." என்று தேவனுடைய வார்த்தை வலியுறுத்துகிறது (மத் 25 :40) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே நமக்கு சிறந்த மாதிரியாக விளங்குகிறார். ஏனென்றால், கல்வாரிச் சிலுவையில் தேவனுடைய அன்பை இயேசு வெளிப் படுத்தினார். (யோ 3 : 16, 13 : 1, 34) தான் தேவனின் இரக்கம் பெற்றேன் என்று பிரதான அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். மேலும் தன் மூலம் இயேசு எல்லாப்பாடுகளையும் வெளிப் படுத்தி, நித்திய வாழ்க்கைக்காக தேவன் மேல் விசுவாசம்

கொள்பவர்களிடத்தில் ஒரு சிறந்த மாதிரியாக தான் விளங்க வேண்டும் என்று விரும்புகிறார். (1 தீமோ 1 : 16) அவருடைய (தேவன்) கட்டளைகளுக்கேற்ப நாம் நடந்தால், நம்மிடத்தில் அன்பு இருக்கும். 1 யோ 4 : 17ல் அன்பின் வெளிப்பாடு பற்றி நன்றாக கூறப்பட்டிருக்கின்றது; ‘‘ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலை கொள்ளுகிறதெப்படி?" நமக்காக தம்முடைய உயிரைத்தந்த கிறிஸ்து தாம் எப்படி நம்மை நேசிக்கிறாறோ அப்படியே நாமும் மற்றவர்களை நேசிக்க வேண்டும் என்று கற்றுக்கொடுக்கிறார் (1 யோ 3 : 16) அப். 3 : 6ல் சப்பாணியான ஒரு மனிதனுக்கு, தம்மிடத்தில் இருந்ததை பேதுரு கொடுத்தான் என்று வாசிக்கிறோம். ஆதி கிறிஸ்தவர்கள் ‘‘காணியாட்சிகளையும், ஆஸ்தி களையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்" என்று அப் 2 : 45ல் படிக்கிறோம். ‘‘சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணு கிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள் . . . பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள் . . . உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி சபியாதிருங்கள் . . . ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள் . . . எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள் . . . உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு" என்று ரோமருக்கு எழுதின தம் நிருபத்தில் பவுல் கூறுகிறார். (ரோம 12 : 10, 13, 14, 17, 18, 20) மத். 5:44ல் ‘‘நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கே நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்து கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" என்று இயேசு கூறுகிறார். ‘‘சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" என்று தம்முடைய மலைப்பிரசங்கத்தில் இயேசு கூறுகிறார். (மத். 5 : 9) " அன்பு நீடிய சாந்தமும், தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும்; சகலத்தையும் தாங்கும்" என்று பவுல் அன்பைப் பற்றி விளக்கமாக 1 கொரி 13 : 4, 5, 7ல் கூறுகிறார்.

என்னுடைய பகைவனை நான் நேசிக்க முடியுமா? இந்தக் கேள்வியின் கருத்தை ஜீரணிக்கவே கடினமானதாக இருக்கின்றது. மேலும் ‘‘முடியும்" என்று சொல்லுவதற்கு நமக்கு கடினமாக

இருக்கிறது. இருப்பினும், கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்கின்ற ஒவ்வொருவனுக்கும் இது அவசியமாக இருக்கிறது. தன்னுடைய அயலாரை அவன் அன்பு செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவர்களுக்கு பகைவர்களே இருக்கக் கூடாது. ஏனென்றால், "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்து நம்மை தேவன் நேசித்தார்" (எபே 2:5) நம்மை கிறிஸ்துவைப்போல் மாற்றவும், உண்மையும் நேர்மையுமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழவும், கிறிஸ்துவிலே நாம் தேவனோடு நித்திய வாழ்க்கையை சுதந் தரித்துக் கொள்ளவும் நாம் நம்மையே ஆயத்தம் செய்ய தேவனிடத்தில் ஜெபம் செய்வோம்.

**தமிழில் பேங்க்ரஸ்**
**ஈரோடு.**

## கிறிஸ்துவின் சபை

1. வேதாகமம் மட்டுமே வழிகாட்டு. ரோம 1 : 16 I தெச 2:13
2. வேதாகமப் பெயரை மட்டும் தரித்துக் கொள்கிறது. ரோம. 16 : 16
3. சரியான இடத்தில் நிறுவப்பட்டது. எருசலேம். (ஏசா. 2 : 2-3 அப் 2-ம் அதிகாரம்
4. சரியான காலத்தில் நிறுவப்பட்டது. கி.பி. 33-34 (யோவே. 2 : 28-32 அப்-2)
5. சரியான அஸ்திபாரத்தின் மேல் நிறுவப்பட்டது. கிறிஸ்து. (மத். 16 : 18, அப் 2 : 36)
6. இரட்சிக்கப்பட்டவர்கள் அதன் அங்கத்தினர். (எபே. 8 : 23 அப் 2 : 47)
7. இவர்களுடைய பெயர் பரலோகத்தில் பதியப்பட்டுள்ளது. (எபி. 12:23)
8. திருமுழுக்கு பெற்று இரட்சிக்கப்பட்டு இதன் அங்கத்தினராக மாறலாம். (அப். 2 : 41, 47, I கொரி. 12:13)
9. பிதாவினிடத்தில் கையளிக்கப்படும். (I கொரி 15 : 24)

# கோதுமையை விதைத்தால் திராட்சை வருமா?

நீங்கள் கோதுமை மணிகளை விதைத்தால், அவை திராட்சையை விளைவிக்குமா? கோதுமை விதையின் உயிரணுக்கள் ஒரேவிதமான பொருளை மட்டுமே உற்பத்தி செய்யும். அது கோது மையாகத் தான் இருக்கும். வேறு ஏதாவது விளைந்தால், விதைத்தது வேறு விதையாகத்தான் இருக்க வேண்டும்.

"விதை தேவனுடைய வசனம்" (லூக் 8 : 11) என தனது உவமைகளின் ஒன்றில் இயேசு கூறினார். கிறிஸ்துவைப் பின் பற்றுவோர் "கிறிஸ்தவர்கள்" என அழைக்கப்பட்டனர் என்பதே இந்த விதை தன்னுள் பொதிந்து வைத்துள்ள செய்தி. "முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர் களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப் 11 : 26) "அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான்" (அப். 26 : 28) அப்போஸ்தலன் பேதுரு இவ்விதமாக எழுதினார். "ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்" (1 பேதுரு 4 : 16) கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் சகோதரர், பரிசுத்தவான்கள், உறுப்பினர்கள், சீடர்கள் என்றெல்லாம் அழைக்கப் பட்டனர்; என்றாலும் 'கிறிஸ்தவன்' என்ற ஒரே பெயர் மட்டுமே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

கர்த்தருடைய வசனம் மட்டுமே ஒரு நல்ல நீதியுள்ள இருதயத்தில் ஊன்றப்பட்டால், அது எதை உற்பத்தி செய்யும்? ஒரே ஒரு சாத்தியமே உண்டு. அம்மனிதன் ஒரு "கிறிஸ்தவன்" ஆவான்.

ஒரு மனிதன் வேறு ஏதாவது மதப்பெயரை சூட்டிக் கொண்டால், எம்மாதிரி யான விதை அந்தப் பெயரை உண்டாக்கிற்று? ஒரே ஒரு சாத்தியமே உண்டு. மனிதர்களுடைய வார்த்தையே (போதனையே) அதை உண்டாக்கிற்று.

கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்கு "கிறிஸ்தவன்" என்ற பெயர் போதாதா? நமக்காக மரித்தவருக்கு மரியாதை செலுத்த "கிறிஸ்தவன்" என்ற பெயரைவிடச் சிறந்த வேறு ஒரு பெயர் இருக்கிறதா?

கிறிஸ்துவை விசுவாசிக்கும் மக்கள் வித்தியாசமான பெயர்களைத் தரித்துக் கொள்ள வேண்டுமா? மாறுபட்ட மதத்தின் பெயர்களை தரித்துக் கொள்வது, மக்களை 'இந்த பிரிவு கிறிஸ்தவன்', 'அந்தப் பிரிவு கிறிஸ்தவன்' என அழைத்துக் கொள்ளும் பலவிதக் குழுக்களாகப் பிரிக்கிறது. "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா (1 கொரி 1 : 31) அவருடைய சரீரத்தின் ஒரு பகுதிக்கு ஒரு பெயரும், மறு பகுதிக்கு வேறு பெயரும் அவர் கொடுத்தாரா? அல்லது, அந்த வேறுபட்ட

பெயர்கள் மனிதனிடமிருந்து தானே (இயேசுவிடமிருந்து அல்ல) வந்தன? அவரைப் பின்பற்றுவோர் யாவரும் ஒன்றாக, ஒற்றுமையுடனிருக்க அவர் வேண்டிக் கொண்டார். (யோ 17 : 20 - 21) "நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று . . . ' (1 கொரி 1 : 10) அப்போஸ்தலர் பவுல் நம்மிடம் வேண்டுகிறார். இயேசு தனது புதிய ஏற்பாட்டிலே தந்த அந்தப் பெயரைப் பற்றிக் கொள்ளாவிட்டால், நாம் ஒரே காரியத்தை உண்மையிலேயே பேசுகிறோமா, உண்மையிலேயே நாம் ஒற்றுமையாக இருக்கிறோமா?

நீங்கள் 'கிறிஸ்தவர்' ஆக மட்டுமே இருக்கலாம்! எந்த மனிதனுக்கும் அப்பெயர் பட்டா செய்து தரப்படவில்லை, எந்த ஒரு குழுவும் அதை தனக்கு மட்டுமே உரிமை கொண்டாட முடியாது. முதல் நூற்றாண்டு மக்கள் நற்செய்திக்கு எவ்வாறு கீழ்ப்படிந்தார்கள் என்பதை, உங்கள் வேதாகமத்தில் அப்போஸ்தலர் நடபடி புத்தகத்திலே படித்துப் பாருங்கள். ஒரு பாவி நற்செய்தியை விசுவாசித்து, தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவில் தனது விசுவாசத்தை அறிக்கை செய்து, பாவங்கள் மன்னிக்கப்பட கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற வேண்டுமென, அப்போஸ்தலர் நடபடிகளிலிருந்தும், புதிய ஏற்பாட்டின் பிற வசனங்களி லிருந்தும் நாம் அறிகிறோம். தனது பாவங்கள் மன்னிக்கப்பட ஒரு பாவி தண்ணீரில் ஞானஸ் நானம் பெற்றுக் கொள்ளும் போது, அவன்/ அவள் விசு வாசத்தில் இரட்சிக்கப்படு கிறான்(ள்) (அப். 2 : 38 -41, 8 : 12- 13, 35 -39, 10 : 47 -48, 16 : 15, 30 - 34, 18 : 8, 19 : 5, 22 : 16, 9 : 18 மத். 28 : 19; மாற்கு 16 : 16, யோ. 3 : 3 -5 ரோ 1: 16, 6 : 3 -5, 17 -18, 10 : 10 ;கலா 3 : 26 -27; கொலோ 2 : 12 1 பேதுரு 1 : 22, 3 : 21).

கர்த்தரின் வசனத்தை மட்டுமே விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்தால் அதன்பின் நீ ஒரு "கிறிஸ்தவனாக" மட்டும் இருப்பாய். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் நீ ஒரு அங்கம் வகிப்பாய் (கொலே 1 : 18, எபே 1 : 22 -23 4 : 4 -6) 1900 ஆண்டுகளுக்கு முன், பெந்தெகொஸ்தே நாளிலே (அப்போஸ்தலர் நடபடி 2ம் அதிகாரத்தில் காணப்படும்) ஆரம்பமான சபையில் நீ ஒரு அங்கமாகிறாய். பின்னர், கர்த்தரை தொடர்ந்து பிரியப்படுத்த, மனிதன் உருவாக்கிய எல்லா மத போதனைகளையும், பாரம்பரியங்களையும் உதறித்தள்ளிவிட்டு, அவருடைய எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதாகமத்தைத் தொடர்ந்துபடித்து, கீழ்ப்படிந்து வர வேண்டும். ( மத்.15:9 யோ.9, யூதா 3, எபி.10:23-25 வெளி 2:10 )

கோதுமை எப்போதும் கோதுமையைத் தான் உற்பத்தி செய்யும், நல்ல நீதியுள்ள இருதயங்களில் ஊன்றப்படும் தேவனுடைய வசனம் எப்போதுமே "கிறிஸ்தவர்களை" உருவாக்குகிறது. ஏன் இன்றைக்கு இயேசுவின் நற்செய்திக்குக் கீழ்ப்படியக்கூடாது?

**தமிழில் : எஸ்.எஸ்.ராஜன்.**

# The National Bible College

## Educating for Eternity

## Offers

**Sound Bible+Indian history, law, and constitution+Financial management skills+Introduction to Computer Science.**

**Which are the very much demanding subjects for a successful gospel preacher to a country rapidly changing both politically and culturally. Gospel preaching has no alternative other than preach the word. God's word is the hope for all!**

**Faculty :** Internationally known, committed men of God.
**Duration :** 30 months (semester system)
**Degree :** Bachelor of Biblical Studies
(Affiliated to the World Christian University)
**Demand :** Must be plus 2 with working knowledge of English.

## Scholarship available

Call or write today for prospectus and other details to

**REGISTRAR,**
**The National Bible College,**
13, Sainagar, Madras- 600082. India
Telephone : (044) 537-0882.

**UNIQUE AMONG THE CROWD**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM**: Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted at Erode HPO on 20, Sep 1994
SEP 1994, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## ஊழியர்கள் கவனத்திற்கு

கர்த்தரின் பெரிதான கிருபையால் இவ்விதழின் ஆசிரியரான அடியேனுக்கு கிறிஸ்தவத் திருமணங்கள் நடத்தி வைக்கும் உரிமம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று கிறிஸ்தவத் திருமணங்கள் நடத்தி, பதிவு செய்யலாம்.

தேவைப்படுவோர், அடியேனின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

'நன்றி'

- ஆசிரியர்

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK - POST

If undelivored Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701